# “கீழடி” அகழாய்வு – வரலாற்றை மாற்றுவதற்கான முன்மொழிவு

*முனைவர் இரா. பழனிச்சாமி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி, மதுரை

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

வரலாறுகள் தோன்றுவனவல்ல உருவாக்கப்படுவன. வரலாற்றைப் படைப்பவனாகவும் உருவாக்குபவனாகவும் மனிதன் இருக்கின்றான். வரலாறு என்பது கிடைக்கும் தரவுகளுக்கேற்பத் தம்மை மாற்றிக்கொண்டோ, புதுப்பித்துக் கொண்டோ இருப்பதை உலக வரலாறு காட்டுகின்றது. வரலாற்றில் பல்வேறு விடுபடல்களும் நாடு சார்ந்த சார்புகளும் உண்டு.

தமிழிலக்கியங்களின் காலம் பற்றிய வரலாறும், முச்சங்கங்கள் பற்றிய வரலாறும் பழங்கதைகளாய் சிலரால் பேசப்படுவதையும் காணலாம். இலக்கியப் பழமையைப் பெற்ற மொழிக்கு அதே காலகட்டத்தைச் சார்ந்த தொல்லியல் அடையாளங்கள் துணைக்குத் தேவைப்படுகின்றன. தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் காட்டும் எழுத்தியல் பதிவுகள் பண்பட்ட ஒரு வாழ்க்கையினைக் காட்டுகின்றன. மனிதனது வரலாறு பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மையுடையது. எனினும் அது பரிணாம வளர்ச்சியினையுடையது. ஆகவே பண்பட்ட நிலையினை அடைய பன்னெடுங்காலம் ஆகியிருக்கும். ஆனால் தமிழில் கிடைக்கும் தொடக்ககால நூல்களே நனிநாகரிகம் பெற்ற படைப்புக்களாக இருப்பதால் அது காலப்புதுமை உடையதாகவே இருக்கும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. எனவே சங்ககால கட்டத்துச் சமூகம் நாகரிகமிக்க சமூகமாக வாழ்ந்ததற்கான தொல்லியல் அடையாளத்தை நோக்கி பயணப்பட வேண்டிய தேவைகள் உருவாகின்றன.

தமிழகத்தில் ஏற்கனவே பல இடங்களில் அகழாய்வுகள் நடந்து ள்ளன. குறிப்பாக திருத்தங்கல், மாங்குடி, கோவலன்பொட்டல், ஆனைமலை, பனைக்குளம், கொடுமணல் போன்ற இடங்களில் நடத்தப்பெற்ற ஆய்வுகளில் பழந்தமிழரின் தொல்லெச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

அவற்றினை அடிப்படையாகக்கொண்டு நோக்கியபொழுது தமிழரின் வாழ்வு கி.மு மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என கரிமக் காலக் கணிப்புகள் தெரிவித்திருந்தன. இதற்குப் பெரிதும் காரணமாக அழகன்குளம், கொடுமணல், ஆதிச்சநல்லூர், அரிக்காமேடு போன்ற இடங்களில் நடந்த ஆய்வுகள் காரணமாகின.

தமிழிலக்கியங்களைப் பொருத்தவரை நமக்குக் கிடைக்கும் முதல் நூலான தொல்காப்பியத்தின் காலமே ஏறத்தாழ ஐந்தாம் நூற்றாண்டாக இருக்க வாய்ப்புள்ளது. அதோடு அதற்கு முன்பே முதற்சங்கம் இருந்துள்ளதைப் பல்வேறு குறிப்புகளின் வழி ஆய்வாளர்கள் நிறுவி வருகின்றனர். இத்துணை செம்மை மிக்கதான பழந்தமிழ் இலக்கியங்கள் உருவாக எத்தனை காலங்கள் ஆகியிருக்கும். எனவே இலக்கியங்களுக்கான தோற்றக் கால அளவு கி.மு எட்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக இருந்திருக்க வேண்டும். இதற்கு வாய்ப்பினை ஏற்படுத்துவதாகக் கீழடி அகழாய்வு அமைகின்றது.

அடையாளம்காணப்பட்டுள்ளதொல்லியல் மேடான நூற்றுப்பத்து ஏக்கர் பரப்பளவில் இதுவரை ஐந்து ஏக்கர் பரப்பளவிற்கே அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் கிடைத்த பொருட்களும், செங்கல்லால் கட்டப்பட்ட குடியிருப்புப் பகுதிகளும் கரிமக்காலக்கணிப்புக்குஉட்படுத்தியபோது அவை கி.மு. ஆறாம் நூற்றாண்டினைச் சார்ந்தவை என்ற முடிவுகள் கிடைத்துள்ளன. இதன்வழியே நோக்கும்போது இது வரை எழுதப்பட்ட வரலாறுகளை இனி மாற்றியமைக்க வேண்டிய தேவையைக் கீழடி உணர்த்துகின்றது.

கீழடியில் வாழ்ந்த மக்கள் நகர வாழ்வினை மேற்கொண்டவர்களாக இருந்துள்ளனர். மனித வாழ்வியலின் தொடக்க காலத்தில் சாத்தியப்படாத பண்பட்ட வாழ்வினை உடையதாக அவர்களின் வாழ்வியல் அமைந்திருந்தது. தமிழகத்தில் பிற இடங்களில் ஆய்வு செய்யப்பட்டபோது கிடைக்காத செங்கல் கட்டுமானங்கள் அதிக அளவில் கீழடி அகழாய்வில் வெளிப்பட்டதே இவ்வகழாய்வின் தனித்தன்மையாகும் (கா. ராஜன், கீழடி, தொல்லியல்துறை வெளியீடு, அணிந்துரை, ப.தி) எனக் கூறுவது முக்கியமானதாகும். இப்பொழுதும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் கீழடி நாகரிகத்திற்கும் ஆயிரம் ஆண்டுகள் இடைவெளி உள்ளதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

மனிதனின் எழுத்து சார்ந்த பதிவுகள் கிடைப்பது அவனது கல்வியறிவின் வெளிப்பாடாகும். கீழடியில் கருப்பும் சிவப்புமான பானையோடுகளில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மண்ணடுக்காய்வின் அடிப்படையில் தமிழ் - பிராமி எழுத்துப் பொறிப்புகள் உள்ள பானையோடுகளின் காலம் கி.மு.500 என்பதாகும். இதன் பொருள் என்னவெனில், தமிழ்நாட்டில் ஏறக்குறைய கி.மு.500 வாக்கிலேயே எழுத்தறிவு நிலை தொடங்கிவிட்டது என்பதாகும் (திலீப் கே.சக்ரவர்த்தி, கீழடி, தொல்லியல்க்றை வெளியீடு,அணிந்துரை, ப.டிது) கீழடியில் மிக அதிகளவிலான பானையோடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பொறிக்கப்பட்டுள்ள எழுத்து வடிவம் “தமிழி” வகையினைச் சார்ந்ததாகும். இதில் மீன் உருவம் வரைந்த பானையோடும், “மடைச்சி” என எழுதப்பட்டுள்ள பானையோடும் இம்மக்களின் இனக் குழுவினை அடையாளப் படுத்துகின்றன.

தற்பொழுதுள்ள மதுரை நகருக்கு மிக அருகில் கீழடி அமைந்துள்ளது. அதோடு பழைய இலக்கியங்கள் குறிப்பிடும்

மதுரை என்னும் நிலவியல் பண்புகளோடும், அமைவிடத்தாலும்நோக்கும்போதுதற்போதைய கீழடியே பண்டைய இலக்கியங்கள் கூறும் மதுரை நகராக இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதை அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மீன் கொடிக்கு உரியவர்களான பாண்டியர்களின் வரலாறும், மடைச்சி என்ற சொல்லுக்கு உரியவர்களாக விளங்கும் மக்களின் வரலாறும் இணையும் போது மருதநிலத் தொல்குடியினரின் அடையாளம் மீட்கப்படலாம் இதற்கு இன்னும் மேலாய்வுகள் தேவைப்படுகின்றன. கீழடியில் அடுத்தடுத்த கட்ட அகழாய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் முழுமையான தரவுகளுக்காகக் காத்திருக்க வேண்டிய தேவைகள் ஏற்பட்டுள்ளன.

தொல்லியல் ஆய்வுகள் தற்போது பன்முகப்பட்டதாக உருவாகியுள்ளன. தொல்லியல் ஆய்வில் அண்மையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளின்படி, சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தொல்லியல் பகுதியில் வாழ்ந்த மக்கள் மட்டுமல்லாமல் அவர்களது பொருள் பயன்பாட்டுப் பண்பாடு குறித்தும் அறிய சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் இனவியல் தொல்லியல் ஆய்வுகளுக்குத் தற்போது தனி முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது (கீழடி, தொல்லியல்துறை வெளியீடு, அறிமுகம், ப.1). இவ்வடிப்படையில் நோக்கும்போது கீழடி மருதநிலப் பகுதியாக அன்றும் இன்றும் இருப்பதைக் காணமுடியும். தொல்காப்பியம் மருத நிலத்திற்குரிய மக்களாக உழவுத் தொழில் செய்த வேளாளர்களை முன்னிறுத்துகின்றது. அதோடு அவர்களது நிலத் தெய்வமாக வேந்தன் என்ற இந்திரனைச் சுட்டுகின்றது. சங்ககாலத்திலும், சிலப்பதிகாரக் காலத்திலும் சிறப்புப் பெற்றிருந்த இந்திர வழிபாடு பின் வந்த காலங்களில் இழிவுபடுத்தப்பட்டு மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளதைக் காணமுடியும்.

அதேபோன்று உழவுத்தொழில் செய்யும் மக்களின் வாழ்வியலைப் பள்ளு இலக்கியங்கள் பிற்காலத்தே பதிவு செய்து ள்ளதையும் மருதநில வாழ்வியலுடன் இணைத்துப் பார்க்கலாம். இப்பின் புலத்திலிருந்து “மடைச்சி” என்ற சொல்லை அணுகுவதற்கான வாய்ப்புகள் உண்டு. நீர் பாய்ச்சும் தொழிலை உடையவர்கள் மடையர்கள் என அழைக்கப்பட்டதையும் அவர்களது வேளாண் உற்பத்திமுறை பற்றியும் சாகித்ய அகாதெமி விருதினை வென்றுள்ள சோ. தர்மனின் “சூல்” நாவல் பதிவு செய்துள்ளதையும் இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும். இவ்வகழாய்வு நடைபெறும் இடத்தைப் “பள்ளுச் சந்தை” என்றே இங்குள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர். இதனையும் எதிர்கால ஆய்வில் முன்னிலைப்படுத்த வேண்டிய தேவைகள் உள்ளன.

இனவியல் தொல்லியல் அடிப்படையில் நோக்கும்போது கீழடியில் வாழ்ந்த மக்கள் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டவர்கள் என்பதும், நாகரிகம் உடைய நகரமயச் சூழலில் வாழ்ந்தவர்கள் என்பதும் பெறப்படுகின்றது. பிறநாட்டவருடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்கு அங்கு கிடைக்கப்பெற்ற கிரேக்க, ரோமானிய நாணயங்கள் சான்றாகின்றன.

அங்கு வாழ்ந்த மக்களின் பொருள் பயன்பாட்டுப் பண்பாடு எனக் காணும்போதும் அவர்களது நாகரிகம் தெற்றெனத் தெரிகின்றது. மண்பாண்டங்கள் செய்யும் நுட்பமும், அதில் எழுத்துக்களையும், சித்திரங்களையும் பதிக்கும் நுட்பமும் தெரிந்தவர்களாக

இருந்துள்ளனர். பெரிய பானைகளை அதுவும் ஆட்களை உள்ளே வைத்து அடக்கம் செய்யுமளவிலான பானைகள் செய்யப்பட்டதனைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. (புறநானூறு, பா.எ.256) இங்கே குறிப்பிடப்பட்ட கலமென்பது ஈமத்தாழியைக் குறித்தது. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட 600க்கும் மேற்பட்ட பொருட்களில் பெரிய வடிவிலான மண்பானைகளும் அடங்கும். இம்மண்பானைகள் வீட்டின் பயன்பாட்டுக்காக இருந்தன என்பதுவே வேறுபாடு. இதற்குக் காரணம் உழுகுடிகள் தானியத்தைச் சேமிக்க அவற்றைப் பயன்படுத்தினர் என்பதாகும். மேலும் அப்பானைகள் யாருடையவை என்பதை அறிய அதில் பெயரைப் பொறித்து வைத்திருந்தனர். அவ்வாறு பொறிக்கப்பட்ட பெயர்களாக "ஆதன், குவிரதன், வேந்தன், சாத்தன், சந்தன், கோதை ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன. ஏறத்தாழ 1001 மண்பாண்ட ஓடுகள் கண்டறியப் பட்டுள்ளன. அவற்றுள் பாதிக்கும் மேற் பட்டவை எழுத்துக்கள் பொறிக்கப் பட்டவை (முரளிதரன் காசிவிஸ்வநாதன், கீழடி நாகரிகம் 2600 ஆண்டுகள் பழமையானது: இந்திய வரலாற்றையே மாற்றும் அகழாய்வு முடிவுகள், ஆஆஇதமிழ், 20 செப்2019) என்பது முக்கியமானதாகும்.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் கூர்முனைப் பகுதிகளை உடையனவாக உள்ளன. அதோடு அவை ஆடு, மாடு போன்றவற்றின் எலும்புகளாகும். எனவே இது கால்நடை வளர்ப்புச் சமூகத்துடன் தொடர்புடையதாக ஆய்வாளர்கள் கருதகின்றனர். உழுகுடிகளாக வாழும் மருதநில மக்கள் உழவுத் தொழிலுக்காக எருது போன்ற கால்நடைகளை வளர்ப்பதைச் செய்திருப்பர். எனவேதான் திமிலுடைய எருதின் எலும்பு அங்கே கிடைத்துள்ளது. அதோடு அப்பகுதியில் நெசவுத் தொழில் பெருமளவு நடந்திருப்பதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. நெசவு நெய்யப் பயன்படும் "தக்களிகள்" மிகுதியாகக் கிடைத்தும் அதைச் செய்ததற்கான மூலப் பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. தொல்லியல் ஆய்வுகளில் மூலப்பொருட்கள் கிடைப்பது முக்கியமானதாகப் பார்க்கப் படுகிறது. அது எதிர்கால ஆய்வுகளில் ஒருவேளை கிடைக்கலாம்.

பொருட்களை அரைத்துப் பயன்படுத்தும் முறையினை அறிந்தவர்களாக அங்கு வாழ்ந்த மக்கள் இருந்துள்ளதை அங்கு கண்டெடுக்கப்பட்ட "அரவைக்கல்" காட்டுகின்றது. சங்ககால மக்கள் குழம்பு வைக்கப் பொருட்களை அரைத்துப் பயன்படுத்தினர் என்பதற்குச் சான்றாகப் பாடல்கள் உள்ளன. அவற்றிற்கு உண்மைச் சாட்சியமாக இங்கு கிடைத்த அரவைக்கல் திகழ்கின்றது. இம்மக்கள் நீர் அருந்த நீண்ட கழுத்துப் பகுதியினை உடைய நீர்க்குடுவைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அக்குடுவை சிதிலமில்லாமல் கிடைத்துள்ளது. மனித முகம், காளை முகம், குழந்தையின் உருவம் தாங்கிய சுடுமண் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றோடு சமயச் சின்னங்களைத் தாங்கிய எந்தப் பொருளும் இதுவரை இங்கு கண்டெடுக்கப்படவில்லை. எனவே இங்கிருந்த மக்கள் சமயக் காலத்திற்கு முன்பு வாழ்ந்தவர்களாக இருக்கலாம். தமக்குத் தொழிலில் உதவி செய்தவற்றையே வணங்கும் மரபுக்கு உரியவர்களாக இருந்திருக்கலாம் என்பதற்குக் காளையின் சுடுமண் சிற்பம் சான்றாகின்றது.

இங்கு வாழ்ந்த மக்கள் ஒப்பனை செய்து தங்களை அழகு படுத்தியுள்ளனர் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் கிடைத்து ள்ளன. தலைமுடியினைவாரிஅழகுபடுத்தத் தந்தத்தாலான சீப்பினைப் பயன்

படுத்தியுள்ளனர். அச்சீப்பின் அமைப்பு சிறிய மற்றும் பெரிய பற்களை உடையதாக உள்ளது. யானையின் தந்தத்தை வைத்து வீட்டின் தூண்கள் நிறுவப்பட்டிருந்தன என்பதைச் சங்கப்பாடல்களில் பார்க்கிறோம். நெடுநல்வாடையில் அரசியின் வட்டக் கட்டிலைத் தாங்கும் கால்கள் தந்தந்தால் செய்யப்பட்டதான பதிவுகள் நம்மிடம் உள்ளன. எனவே தந்தத்தைப் பயன்படுத்திப் பொருட்கள் செய்து புழங்கும் வழக்கம் அன்றிருந்தது என்பதற்கு இங்குக் கிடைத்த “தந்தச் சீப்பு” சான்றாகத் திகழ்கின்றது.

அணிகலன் என்ற தன்மையில் நோக்கினால் கீழடியில் வாழ்ந்த பெண்கள் தங்கத்தாலான அணிகலன்களை அணிந்துள்ளனர்.

**நேர் இழை மகளிர் உணங்கு**
**உணாக் கவரும்**
**கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழைஇ**
**பொன்கால் புதல்வர் புரவி**
**இன்று உருட்டும்**
**முக்கால் சிறுதேர் முன்வழி விலக்கும்**
**(பட்டினப்பாலை, பா.எ.22-26)**

என்ற வரிகளில் பொன்னாலான அணிகலன்களைப் பெண்கள் மிகுதியாக அணிந்திருந்ததைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. இதற்குச் சான்று கூறும் வகையில் கீழடியில் மகளிர் அணியும் தங்கத்தாலான ஏழு அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதோடு கண்ணாடியாலான மணிகள் குவியலாய் கிடைத்துள்ளன. கருப்பு, இளமஞ்சள், அரக்கு நிறத்திலான மணிகளும் எடுக்கப்பட்டுள்ளன. தங்கத்தாலான அணிகலன்களாகத் தொங்கட்டான், வளையம், ஊசி, மணி, தகடு போன்ற வடிவங்களைக் கொண்டவை கண்டறியப்பட்டுள்ளன. இப்பொருட்கள் அங்கு வாழ்ந்த மக்களின் “அழகியல்” குறித்த கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இது நாகரிகம் உடைய சமூகத்திற்கே சாத்தியமானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நிலையான குடியிருப்பினையும், நிலைத்த உற்பத்தியையும் வருமானத்தையும் ஈட்டும் வாய்ப்பினைப் பெற்றவர்களுக்கே “பொழுதுபோக்கு” என்பது சாத்தியப்படும். சங்க இலக்கியங்களில் நான்கு திணை மக்களும் வருமானத்திற்குப் படாதபாடு பட்டுக்கொண்டிருக்க மருதநில மக்கள்தான் முதன்முதலில் நிலையான குடியிருப்பை உருவாக்கி அதற்கு “ஊர்” என்ற பெயரிடனர் என்பதை அறிகின்றோம். அதோடு உற்பத்தி மற்றும் சேமிப்பு என்பதையும் முதலில் நடைமுறைப்படுத்தியவர்கள் அவர்களே. அதனால்தான் அவர்களால் செல்வச் செழிப்பான வாழ்க்கையை மேற்கொள்ள முடிந்தது. எனவே இங்கும் பொழுது போக்கிற்கான தன்மைகள் மிகுந்திருந்தன என்பதை அறிகின்றோம்.

கீழடியில் சதுரங்கம் விளையாடக்கூடிய ஆட்டக்காய்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் வட்டச் சில்லுகள் கிடைத்துள்ளன. ஆறு பக்கங்கள் கொண்ட பகடைக்காய்கள் கிடைத்துள்ளன. இவ்வகைக் காய்களை வைத்து மட்டுமே பத்து என்ற எண் கொண்ட அளவு பகடைகளை உருட்ட முடியும். இவ்வகைக் காய்கள் கீழடி உட்பட்ட தமிழக அகழ்வாய்வு இடங்களில் மட்டுமே கிடைத்துள்ளதை அறிய முடிகிறது(ஆர். பாலகிருஷ்ணன், கட்டுரையாளர், கீழடி அகழ்வாய்வு தேசிய கருத்தரங்கம், மதுரை, டிசம்பர் 18-20, 2019). பகடையால்; உருவானதாக மகாபாரதம் என்ற வடமொழி இதிகாசம் உள்ளதையும் குறிப்பிட்டுச்சொல்ல வேண்டும் அதே சமயம் வடபகுதிகளில் கீழடியில் கிடைத்ததைப் போன்ற செறிவுபெற்ற பகடைக்காய்கள் கண்டறியப்படவில்லை

என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய பொழுதுபோக்கு விளையாட்டு அம்சங்களுடன் ஒரு சமூகம் வாழ்ந்துள்ளது எனில் அச்சமூகம் பண்பட்ட சமூகமாக இருந்திருக்க வேண்டும்.

கீழடியில் மேல்மட்ட அளவில் கிடைக்கப்பட்ட பொருட்கள் கி.மு.2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் கண்டறியப்பட்டிருந்தது. அடுத்தகட்ட அகழ்வாய்வில் கீழே கிடைத்த பொருட்கள் கி.மு.6ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே இனிவரும் காலங்களில் மேலாய்வு செய்யும்பட்சத்தில் கீழடியின் காலம் கி.மு.9 ஆம் நூற்றாண்டிற்கு முன்பாகச் செல்ல வாய்ப்புள்ளதாக அறிஞர்கள் கருதுகின்றனர். அது சாத்தியப்பட்டதெனில் தமிழ் இலக்கியங்களின் காலம் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு முந்தையதாக இருப்பதை நிறுவுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். அப்பொழுது இதுவரை எழுதப்பட்ட இந்திய வரலாற்றை மாற்றி எழுதப்பட நிலை ஏற்படும்.